ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஸுவர்ணத்தைப் புடம்போட்டு, மாசு நீக்கி, மாத்து ஏற்றி, மெருகு கொடுத்து பளபளப்பாய் வைத்திருந்தாலும், அல்லது ஸுவர்ணஸ்வரூபமே தெரியாமல் அழுக்கேறி மங்கியிருந்தாலும் அது ஸுவர்ணந்தான், மாசுள்ளதாயிருப்பதுபற்றி ஸுவர்ணமல்லாததாக ஆய்விடமாட்டாது, ஒருஸமயம் புடத்தில் வைத்து எடுத்துவிட்டால் அதன் இயற்கைகுணமான பளபளப்பு உண்டாய்விடும். ஸுவர்ணத்திற்குப் புடம்போட்டு பளபளப்பையுண்டுபண்ணுவதுபோல் இரும்புக்கும் புடம்போட்டு அந்தப் பளபளப்பையுண்டுபண்ணிவிடலாமே என்று எவன் முயன்றாலும் ஆகாத காரியம். அந்த ஸுவர்ணத்திலும் அதிகமாகத் தேறியதற்குத் தக்கவாறு அதிக மதிப்புண்டு. 5-மாத்துள்ள ஸுவர்ணத்தைவிட 6, 7 முதலிய மாத்துள்ளசுவர்ணம் சிறந்ததென்பது பிரசித்தமல்லவா? சுவர்ணத்தன்மை எல்லாவற்றிலும் இருப்பினும் 5-மாத்துத்தங்கம், 7மாத்துத்தங்கமாய்விடமாட்டாது. அதுஒருசமயம் அழுக்கேறியிருந்தாலும் 5மாத்துதங்கத்தைவிட அதன் இயற்கையாயுள்ள உயர்வைக்குறைத்துவிட முடியாது. 5-மாத்துத் தங்கம் பளபளப்பாக இருந்தாலும், 7-மாத்துத்தங்கத்தின்மதிப்பையடையும் உயர்வை அடைந்துவிடமாட்டாது. அப்படியிருக்கையில் இரும்புக்கு எவ்வளவு ஆயிரம் புடம்போட்டாலும் அது தாழ்ந்தமாத்துள்ள தங்கம் போலவாவது ஆய்விடுமா? ஒருக்காலுமாகமாட்டாது. இரும்புக்கட்டியை உயர்ந்த கட்டடத்தில் மூன்றாவதுமாடியின்மேல் வைத்தாலும் தங்கத்தைவிட உயர்ந்ததாகமாட்டாது. தங்கத்தைத்தெரியாமல் குப்பையில் தள்ளிவிட்டாலும் தாழ்ந்ததாய்விடமாட்டாது. அதனாற்றான் சுவர்ணத்துவ (சுவர்ணத்தன்மை) ஜாதிவாய்ந்த லோஹம், மற்ற வெள்ளி, பித்தளை, இரும்பு முதலிய லோகங்களை விட இயற்கையாகவே உயர்ந்ததாக பாவிக்கபடுகின்றது. அதிலும் குறைந்தமாத்துள்ளதைவிட அதிகமாத்துள்ளது சுவர்ணஜாதியிற் சிறந்ததாகக் கொண்டாடப்படுகின்றது. இதுபோலவே தான் பொதுவாய் மனுஷ்யத்துவ (மனுஷ்யத்தன்மை) ஜாதிவாய்ந்த பிராணிகள் பசு, பக்ஷி முதலிய திர்யக்ஜாதிகளை விட உயர்ந்தவர்களென்று பாவிக்கப்படுகிறார்கள்: அதிலும் குறைந்த ஸம்ஸ்காரங்களுள்ளவர்களை விட அதிக ஸம்ஸ்காரமுள்ளவர்கள் சிறந்தவர்களாகக்கொண்டாடப்பட்டிருக்கின்றார்கள். அத்தகைய ஸம்ஸ்காரம் 40 என்று அறநூல்களில் கூறப்படுகின்றது. புடம்போட்டு பளபளப்பை சுவர்ணத்திற்குத்தான் உண்டுபண்ணுவதுபோல ஸம்ஸ்காரங்களெனப்படும் சடங்குகளை துவிஜர்களுக்கு செய்தாற்றான் பயன்படும். மற்றவர்க்கும் செய்வோமேயென்றால் செய்யலாம். இரும்புக்குப் புடம் போட்டதுபோலாகும். அத்தகைய ஸம்ஸ்காரம் ஜன்மபரம்பரையாய் பெற்றவர்களைத் தாழ்த்தவாவது மற்றவர்களை உயர்த்தவாவது எவராலும் முடியாதகாரியம். ஆகையால் இதில் வீண்பாடுபடாமல் சாஸ்திரீயவழியில் நடந்து யாவரும் சுகித்திருப்பார்களாக,

சுபம் !

பத்திராதிபர்.

உ

# ஆர்யதர்மம்.

சுக்ல-ஹஸ்தை-மீ௴ ௧௰௨

## விவாஹம்.

---

கர்ப்பாதனம் முதலிய, 40, ஸம்ஸ்காரங்களுள் விவாஹமென்பது 9-வது ஸம்ஸ்காரமாகும். இந்த விவாஹஸம்ஸ்காரம் உபனயனாதிகள் போலவே மந்திரபூர்வகமாகச் செய்ய வேண்டுமேயன்றி பசுதர்மம் போல் கண்டபடி ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து விடலாகாது. அதற்காகவென்றுதான் மந்திரப்ரச்னத்தில் மந்திரங்கள் படிக்கப் பட்டிருக்கின்றன. விவாஹ விஷயத்தில் மந்திரலிங்கத்தை (மந்திரங்களின் மேன்பார்வையாய்த் தோன்றும் பொருளை) ஆராய்ந்து அபூர்வமாக அர்த்தம் கண்டு பிடிக்கின்றவர்களுக்குமிது இஷ்டந்தான். சரியானபடி மந்திரலிங்கத்தை யாராய்ச்சி செய்தால் வரன் பெண்ணைத் தேடி அடையவேண்டுமேயன்றி எவ்விதத்திலும் பெண்கள் சுயமாக ஓர் சபையாருக்கு எழுதியோ, அச்சபையார் பத்திரிகைகளில் பிரசுரித்தோ, வரனைத் தேடுவது உசிதமென்று ஏற்படமாட்டாது. தற்காலத்தில் இந்த ரீதியை பெரிய நாகரீகமாக நினைக்கின்றார்கள். இவ்வாறு நாகரீகம் பெருவதே தேசமுன்னேற்றத்துக்கு முக்கிய காரணமென்றும் கருதுகின்றனர். இது எந்த மந்திரலிங்கத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டதோ? அல்லது எந்த சரித்திர ஆராய்ச்சியிலிருந்து ஸஹிக்கப்பட்டதோ தெரியவில்லை, ஸ்வராஜ்யப்பேச்சு வெகு தூரத்திலிருக்கும் போதே சிலர் சுதந்திரத் தன்மையை வஹித்து நீண்டகாலமாய் நடந்து வந்த உலகத்தின் பழக்கவழக்கங்களையே மாற்றிவிடத் துணிந்து விடுகிறார்கள். அதன் பயனாக விவாஹத் தடைமசோதா, கர்ப்பத்தடை மசோதா முதலிய பல மசோதாக்கள் நவீன நாகரீகத்தின் கொழுந்தாகக் கிளம்பிவிட்டன. வியபிசாரத்தடை மசோதா ஒருவர் கொண்டு வருகிறார். அதுவே தேசக்ஷேமத்திற்குக் காரணமென்று அவர் சாதிக்கின்றார். விதவா விவாஹ ஸபையார் அதுதான் உலகநன்மைக்கு நல்ல ஹேது வென்கிறார். அந்த விவாஹமானபின் அதிற்சேர்ந்த ஸ்திரீபுருஷர்க

ருக்கு மணம் சேராவிடில் விவாஹரத்து செய்து விட வேண்டுமென்று சிலர் சட்டமிடப் பார்க்கின்றனர். இப்படி எவ்வளவு விவாஹங்கள் செய்யப்படலாம். எவ்வளவு ரத்து செய்யப்படலாம் என்ற கணக்கு சித்திரகுப்தனுக்கும் புரியாதுபோலத் தோன்றுகிறது. இவையெல்லாம் வியபிசாரத் தடை கக்ஷிக்காருக்கும் ஸம்மதர்களோ? அல்லவோ? தெரியவில்லை. அவர்களுக்கு ஸம்மதமில்லாவிடில் இதைப்பற்றியும் அவர்கள் ஏதாவது பேசியிருப்பார்கள். அப்படி பேசியிருப்பதாகத் தெரியவில்லை' ஸம்மதமாகவே இருக்குமாயின் வியபிசாரத்தடை செய்வதனால் என்ன பயனோ தெரியவில்லை. எந்த கக்ஷியைப் பேசினாலும் வேதத்தைப் பிரமாணமாகக் கொடுத்து விடத் துணிந்து விடுகிறார்கள்' அதையே வெகுரஸமாகக் கேட்போரும், மதிப்போருமே அதிகமாகி விட்டார்கள். வேதத்தின் உண்மைக் கருத்தை விளக்குகின்றவர் குறைவாயிருப்பதாலும். அவர்களும் அதிகமாக வெளிகளில் புறப்படாதபடியாலும், அவர்கள் பேசும் பேச்சு ஒருவர் காதிலும் விழுவதில்லை. இவ்வளவு ஸமாசாரங்களும் அந்த வைதிகர்களுக்கு இப்பொழுது தான் கொஞ்சமாகக் காதில் விழுகிறது. காதில் கேட்டபிறகும் அவர்கள் ஸ்வபாவத்தைவிட்டு வெளிப்பட்டபாடில்லை. ஆகவே எதிர்வாதமில்லாதபடி ஒவ்வொரு தினத்திலும் விபரீதாசார விஷயங்கள் தினசரிப் பிரசுரங்களில் வெளிவருவதைப் படிக்கின்றவர்கள் அதுவே சரியோவென்று பிரமத்தையடைகின்றனர். அது சரியல்ல. சாஸ்திரசித்தாந்தத்தை சரிவரத்தெரிந்துகொண்டு ஒரு காரியத்தை நிச்சயிக்க வேண்டுமேயன்றி அவசரப்பட்டு பிரமித்துவிடுவதும், அதற்குத் ப்ரதிக்கவாறு நடத்திவிடுவதும் பரலோகத்தை நம்பின பிராமணிகாரர்களுக்கு சிரேயஸ்கரமாகாது. ஆகையால் விவாஹம் செய்வதை சாஸ்திரவிசாரம்செய்து நிச்சயித்தபடியே தீர்மானிக்கவேண்டும்.

பத்திராதிபர்.

---

## பத்திரிகை அவசியமில்லையா?

இதற்குமுன் 48-வது சஞ்சிகையில் ஈசன் அருள் வேண்டும் என்ற தலையின் கீழ்பத்திரிகையைப்பற்றி எழுதினேன். மீண்டும் இங்கு அதையே வற்புறுத்த வருகிறேன். ஆதியில் ஸ்ரீமான்

T.R. ராமச்சந்திரய்யர் அவர்கள் பங்கு 1க்கு 100ரூ விதம் 3000 ஆஸ்திகர்கள் நம் தேசத்திலில்லாமற் போனால், நாம் இக்காரியத்தை ஆரம்பிக்கவேண்டாமென்று கூறினர். அப்போதிய உத்தேசம் 3-லக்ஷம். அதன்பிறகு இப்போது ஷெ அய்யாவர்களே மூன்று லக்ஷம் போதாதென்றும் பத்திரிகை அவ்வளவு அவசியம் இல்லையென்றும் பிரசாரமூலமே சகலகாரியங்களையும் செய்துவிடலாமென்றும் எண்ணிவிட்டார்களா? 3-லக்ஷம் போதாதென்று எண்ணியிருந்தால் அது நியாயமல்ல. அவ்விதம் கணக்கிட்டதை வெளியிட்டிருந்தால் நலமாயிருக்கும். ஏதோ ஒவ்வொருவரையும் குறைகூற ஆரம்பிப்பதாய் என்னை எண்ணக்கூடாது. வயதிலும் ஐசுவரியத்திலும் செல்வாக்கிலும் ஆஸ்திக்யத்திலும் ஆசாரானுஷ்டானங்களிலும் மேன்மை பெற்ற அம்மகான் முதலில் இக்காரியத்தில் முன்வந்து நின்றதால் நமது காரியம் இடையூறின்றி நிறைவேறுமென்று எல்லா ஆஸ்திகர்களும் எதிர்பார்த்திருந்தனர். இப்போது அம்முயற்சி சோர்வடைவதுபோலிருப்பதை கவனிக்கும் ஆஸ்திகர்கள் என்போன்றவர்களைக் கேட்பதிலிருந்து யான் இவ்விதம் கூற முன்வருகிறேனேயொழிய வேறல்ல. ஆகவே பிரகிருதத்தை அனுஸரிக்கிறேன். ஆதியில் போட்டதிட்டபடி நாம்பணவசூலுக்கு ஆரம்பிக்கவேண்டியதுதான். முன் பத்திரிகையிற் கூறப்பெற்ற ஆஸ்திககனவான்கள் கூடியசீக்கிரம் ஒன்றுகூடி ஸ்ரீமடங்களிலிருந்து முதலில் தொகையை வசூல் செய்யவேண்டும்.

பிறகு சிற்சில முக்கியவிடங்களுக்குப்போய் ஆங்காங்கு பணவசூலுக்கு வேண்டியஏற்பாடுகளை இரண்டொருதினங்களிலிருந்து செய்யவேண்டும். இன்னும் இதுவிஷயமாய் அப்போதப்போது புத்திமான்களுக்குப் புதிதுபுதிதாக யுக்திகள் தோன்றக்கூடும். இவ்விதம் பிரதி ஜில்லா தாலூகா கிராமங்கள் தோறும் நன்முயற்சி செய்தால் 3-லக்ஷத்தோடு நின்றுவிடுமா? அதிகமாகவே வசூலாகுமே தவிர குறையாது. பிராமணர்கள் மட்டுமல்ல. பிராமணால்லாதவர்களிலும் பல ஆஸ்திக கனவான்கள் இருக்கின்றனர். அவர்களும் இதில் முன் வருவார்கள். இருக்கட்டும். 3-லக்ஷத்திற்கும் நம் தமிழ்தேசமே போதுமானது. ஆந்திரதேசம் முதலியவைகளில் பிரசாரத்தினால் அதிகம் கிடைக்கும்போது அப்போது தெலுங்கு பாஷையிலும் ஆரம்பித்துக்கொள்வோம். மற்ற உத்தேசத்திற்கு குறைவாகவே வசூலாவதாய் எண்ணிக்கொள்

வோம். அதனாலும் கெடுதலில்லை. தினசரி பத்திரிகையாகவே தமிழிலும் தெலுங்கிலும் சுமார் 2000-பத்திரிகை வெளியிடும்படி வேண்டிய பிரஸ்சாமான்களையும் உத்யோகஸ்தர்களையும் மட்டாய் ஆரம்பித்து நடத்தினால் அது வரவர வளரும்போது நாமும் பத்திரிகையைப் பெருக்கிக்கொள்ளலாம் இதனால் நஷ்டம் ஏற்பட வழியுண்டா? அங்காங்கு பிரசாரகர்களைக்கொண்டு எல்லாவற்றையும் பெருக்கிக்கொள்ளலாம். வியாபாரிகளுடையவும் கம்பெனிகளுடையவும் பிரசுரங்கள் யாவும் அங்கீகரிக்கத்தக்கதுதான். அதனால் வரும் வருமானமும் பத்திரிகைசந்தா வரூலும் சில மாதங்களுக்கு தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும். முதலில் குறைந்த பக்கங்களும் அளவிற் சிறியதாயும் போடுவோம். பிறகு வர இன்றுமுதல் 2-பக்கங்கள் அதிகமாகும். பத்திரிகை இனி இவ்வளவு அங்குல அகல நீளமுள்ளதாக வெளிவருமென்றும் மெதுவாய் பாலசந்திரன்போல் வளரக்கூடாதா; இவ்விதம் செய்யும் போது ஒரு சமயம் சற்றுப்போததுபோலானால் அப்போது அம்மூலதனத்தின் வட்டியில் அல்பபாகம் சேரட்டும். இவ்விதம் புத்திமான்கள் நன்கு ஆலோசித்து இவ்விஷயம் அவசியம் என்று முன்நின்றால் நம்நாடு ஒருகாலத்திலும் விட்டுக்கொடுத்துவிடாது. இவ்விதமாவதுபத்திரிகையை நடத்தவேண்டியதுதானோஎன்றால் வேண்டியதுதான் என்பதையும் கூறுகின்றேன். இக்காலத்தில் பத்திரிகையைப்போல் பிரசாரகர்கள் ஆயிரக்கணக்காய்வேலைசெய்தாலும் அது சரியாகிறதில்லை நிதர்சனமாய்ப் பார்ப்போம். நம் ஸ்ரீமான் ராமச்சந்திர அய்யாவர்கள் பாலக்காட்டில் விவாஹத்தைப் பற்றி இரண்டொருநாள் உபன்யசித்ததாய் பத்திரிகைகளிற் கண்டோம். மறுநாள் முதல் நாளது வரையில் என்ன ஆயிற்று. தற்காலம் ஹிந்து, மித்திரன் முதலியவைகளைத் தருவிக்கும் நபர் ஒருவராயினும் அதைப்படிக்கும்போது புராணசிரவணம்போல் பக்திசிரத்தையோடு கேட்பவர்கள் பலர். பிறகு அந்தகோஷ்டி முடிந்தவுடன் இன்னொருவர் அப்பத்திரிகையை வாங்கிச் செல்கிறார். ஆகவே உலகிலுள்ள மனிதசாமான்யம் யாவரும் பத்திரிகையைப் படித்தவர்களாகிறார்கள். இதுபோல் பிரசாரம் வேலை செய்யுமா? ஓர் இடத்தில் உபன்யாசத்தைக் குறிப்பிட்டு பத்திரிகை மூலம் பிரசுரம் செய்தால் அங்குவந்து கேட்கக் கூடுகிறவர்கள் இருவர் மூவரே. ஆகவே மெதுவாயாவது ஆமைபோல்

நமது பத்திரிகை வர ஆரம்பிக்கட்டும். அதிலிருந்து பெரும்பயனை அடையலாம். லாகூர் காங்கிரஸ்ஸில் சட்டமறுப்பு விஷயமாய் தீர்மானம் செய்துகொண்டு இம்மாதம் 26உயன்று ஏதோ வேலை செய்யப்போவதாய் தினமும் ஹிந்துவிலும் மித்திரனிலும் பிரசுரம் செய்கிறார். அன்று ஏதோ அதிகமான ஏற்பாடு நடக்கத்தான் போகிறது. ஆகவே 'சிறுகக்கட்டிப் பெருக வாழ்க' என்ற நியாயப்படி பத்திரிகையை ஆரம்பிக்கவே பெரியோர்கள்முன்வரவேண்டும். பிறகு காங்கிரஸ்காரர்கள் காலிசெய்யும் ஸ்தானங்களில் நம்மவர்களை நிறைப்ப வழி தேடவேண்டும். இப்போது ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரியாரவர்கள் M. L. A. க்கு நிற்பதாய் பத்திரிகையில் பார்த்தது ஆனந்தமே. ஆயினும் அவர்கள் 1000-ரூ வீதம் 30-பெயர்களிடத்தில் வசூல் செய்யலாமென்று முதலில் யுக்திகளைக் கூறிவிட்டு இப்போது இவ்விஷயத்தைப்பற்றிப் பேசவாவது இதற்கு ஏற்படும் சபைகளில் பிரஸன்னமாய் இருக்கவாவது முடியாமலிருப்பதும் அழகாக இல்லை. அம்மகான் ஒருவர் நம்மதத்திற்கு வந்திருக்கும் ஆபத்தை விலக்கவேண்டுமென்று எண்ணிவிட்டால் நம் ஆபத்து ஒரு பொருட்டல்ல,

हे वीरा यूथनाथाः परिणतिपरुषः कायँ आसीद्विषादः
कस्मादस्माकमेतज्जलनितरणे शक्तिरेतावतीति ।
स्मृत्वा राज्ञः प्रतिज्ञामयमनिलसुतो लंघनायोन्मुखश्चेत्
भेदः प्रादुर्भवेत्किं कथयत पयसामास्पदे गोष्पदेवा ॥

ஸீதையைத் தேடிக்கொண்டு தென்திக்கு சென்ற ஜாம்பவன் முதலியவர்கள் சென்று லங்கைக்குப்போவதற்கு சமுத்திரத்தைத் தாண்ட யார் சக்தர்களென்று கேட்கும்போது ஒன்று 10 மைல் போவேனென்றும், மற்றொன்று 20-என்றும் இவ்விதம் சொல்லிக்கொண்டேபோகும்போது ஓர் மூலையில் ஒன்றும் பேசாது முழங்கால்களைக் கட்டிக்கொண்டு தலை குனிந்துகொண்டிருந்த ஹனுமாரைப்பார்த்து ஜாம்பவன் சொல்லும் வசனம் இது. "ஓ கூட்டத் தலைவர்களே! ஏன் ஒவ்வொருவரும் இவ்விதம் குழப்பமடைகிறீர்கள், சமுத்திரத்தைத்தாண்ட என் சக்தி இவ்வளவுதானென்று ஏன் வருத்தமடைகிறீர்கள்? நமது அரசனின் கட்டளையை நினைத்து இதோ இந்த வாயுபுத்திரன் சமுத்திரத்தைத் தாண்ட எண்ணிவிட்டால் இச்சமுத்திரம் மாட்டுக்குளம்படிதான் ஏற்படும்.

அதாவது அனுபஸமாய்த் தாண்டிவிடுவாரென்றார். பிறகு நடந்த கார்யங்கள் ஆஸ்திகர்கட்குத் தெரிந்ததே. அதுபோல் நம் ஆசார்யாவர்களையும் ஸ்ரீராமச்சந்திரன் உட்புகுந்து அனுக்கிரஹித்து விட்டால் நாமெல்லோரும் கவலையடையவேவேண்டாம். எவ்விதமாவது ஈசன் தன் காரியத்தைப் பார்த்துக்கொள்ளுவானென்றிருந்தாலும் நாமும் வேலைசெய்யவேண்டுமென்பது கொண்டு நம் கார்யஸித்திக்குப் பத்திரிகையை முன்னுக்குக்கொண்டுவரவேண்டியதே முதற்கடமை என்பதை மனதில் இறுத்திக்கொள்ளவேண்டும். என் நண்பர் ஒருவர் ஆர்யதர்மம் 14வருடமாய் என்னவேலை செய்திருக்கிறது? அதுபோலவே தான் இந்தப் பத்திரிகையும் என்று கேட்கிறார். அதுபோலல்ல இது. அது வாரப்பத்திரிகை இது தினசரிப்பத்திரிகை. அது மதவிஷயத்தைமட்டிலும் வெளியிடுகிறது. இது ராய்டர் முதலிய சகல விஷயங்களை முக்கியமாயும் பின்னால் நம்மதவிஷயத்தையும் வெளியிடப்போகிறதால் வாவா இதை ஹிந்து முதலிய பத்திரிகைகளைப்போல் வாங்கும்படி தூண்டுகிறோமென்று வேற்றுமை அதிகமென்பதையும் தெரியப்படுத்துகிறேன். இதுவிஷயமாய் விஷயமெழுதுபவர்கள் தற்போது இப்பத்திரிகை மூலம் வெளியிடக் கேட்டுக்கொள்கிறேன்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி, மதுரை.

---

## வேண்டுகோள்.

தம்தம் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளவும், மற்றவர்களும் அறிந்துகொள்ளவேண்டி, நமது ஆர்யதர்மத்தில் பலர் சந்தேக வினா செய்கிறார்கள்.

அவற்றுள் சில கேட்பவற்கே தேவையுள்ளதாயும், மற்ற சாதாரண சந்தாதாரர் அறியமுடியாமல் வெறுக்கக்கூடியதாயும் ஏற்படுகின்றன.

அப்படிப்பட்ட கேள்விகளை சந்தேஹிகள் பெரியோர்களாயும், நம்பிக்கையுள்ளவர்களாயுமுள்ளவர்களிடத்தில் பதிலனுப்ப தபால் பில்லையுமனுப்பி பதில் வாவழைத்துத் தீர்த்துக்கொள்வார்களாக. இதற்காக மத்ராப்ராந்திய பிராம்மணஸபையோரால் "தர்ம சாஸ்திர ஸபை" என்று ஓர் கிளைச்சபையும் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

காரியதர்சி,
தெ. ஜி. பிராம்மணஸபை.

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

# தர்மமே துணை.

கோவில்வீரட்டம், ஆரியதர்மாபிவர்த்தனி, பிராம்மணமஹா சபைகளின் சார்பாக சென்ற இரண்டு ஆண்டுகளாய் நகர் உயர்தர கலாசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சில ஆஸ்திக சிரோமணிகளாகிய பிரபுக்கள் இவர்களுக்காக நடைபெற்றுவரும் வேத அத்யயன வகுப்பினர்களால் சென்னையில் இம்மாத முதலில் நடைபெற்ற அகிலஇந்திய ஸனாதனதர்ம மகாநாட்டின் உபதலைவரும், நியாயவாதியும், ஸ்ரீபிரகந்நாயிகா ஸமேத வீரட்டஹாஸேசுவரர் தேவாலய தர்மகர்த்தாவுமான பிரும்மஸ்ரீ T. S. ராமச்சந்திரய்யர் அவர்களின் நன்முயற்சியால், தற்போது சில துராசார துராத்மாக்களால் நம் ஸனாதன வைதிகதர்மத்திற்கேற்பட்டுள்ள பல ப்ரதிபந்தங்களுள், ராஜாங்கஸம்பந்தமாக வந்துள்ள மிகக் கொடிய சாரதா விவாஹ வயது மசோதா அனுஷ்டானத்தில் வராது ஒழிந்துபோவதற்காக ஆங்காங்கு ஸதாசார வைதிக தர்மானுஷ்டானிகளான பலமஹான்கள் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற உறுதியைக் கைப்பிடித்தவர்களாய் எல்லாம் வல்ல இறைவன் துணையை வேண்டி பலவிதமாக மந்திர ஜப, ஹோம, பாராயண, யக்ஞாதிகளால் சர்வேசுவரனை ஆராதித்து வருவதுபோல், ஸ்ரீபிரகந்நாயகியார் ஸன்னிதானத்தில் சென்ற கார்த்திகைமாதம் 19௳ முதல் மார்கழி மாதம் 5௳ வரையில் டிை பெரியார் உடனிருந்து ஏகாதச ருத்திரபாராயணத்தைச் செவ்வனே நடைபெறச் செய்வித்தார்கள்.

கடைசிதினத்தில் உலகக்ஷேமத்தை முன்னிட்டு, மஹன்னியாஸ புரஸ்ஸரமாக அபிஷேக ஆராதனைகள் கிரமமாக நடத்தப்பட்டன.

சுபம்.

இப்படிக்கு,
K. R. சுப்பிரமணிய சாஸ்திரி,
காரியதரிசி.

க்ருத்ரிமன், கூடோத்பன், அபவித்தன், கானீனன், ஸஹோடன், க்ரீதன், பௌனர்பவன், ஸ்வயதத்தன், சௌத்ரன் என பன்னிரண்டு விதமாகப் புத்திரர்களைப் பிரித்திருப்பதால் ஔரஸனைத் தவிர க்ஷேத்ர ஜாதிகளுக்கும், ஔரஸனைப்போல் புத்ரத்வமுண்டென்று ஸ்மிருதிகளில் சொல்லியிருப்பது, வார்ஸாக்கிரமமாக தந்தையின் தாயவிபாகத்தைக் குறித்தேயன்றி, சிராத்தம் முதலியவைகளில் அவர்களுக்கும் அதிகாரம் உண்டென்பதற்காக அல்லவாதலால் தனது மனைவியிடத்தில் பிறரால் உண்டுபண்ணப்படும் புத்திரனைக்கொண்டு பரலோகத்தையடையலாம் என்ற எண்ணம் மனோரதமாத்திரமேயாகும். வேதங்களிலும் அன்யோதா புத்திரனை ஔரஸனைப்போல் நினைத்துக்கொள்வது பிசகு என்று பலவிடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. மகாஅநர்த்தகரமாகிய வ்யபிசாரதோஷம் சரீரம், வாக் இவைகளால் ஸம்பாதித்துக் கொண்டால்தான் தோஷமாகும்; மனத்தால் ஏற்படும்பக்ஷத்தில் தோஷமில்லையென்பது தவறு. புண்யமோ பாபமோ இவ்விரண்டும் மனோவாக்காயங்களாலேயே யாவராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அதில் சரீரத்தால் ஸம்பவிக்கும் புண்யபாபங்கள் இருப்பதுபோல் வாசிகம், மானஸிகம் இவ்விருகாரியங்களிலும் புண்யம், பாபம் என்ற பேதமுண்டென்றுதான் நாம் நம்பவேண்டும். இவ்விஷயத்தை ஸமந்வயாதிகாரணாரம்பத்தில் ஸ்ரீபகவத்பாதாளும் விஸ்தாரமாய் ஸ்தாபித்திருக்கின்றார். ஆகவே பிறருடன் சரீரஸம்போகம் ஸம்பவித்தாலும், ஹாவபாவங்களுடன் பேசுவதாலும், பரபுருஷனையே அடிக்கடி தியானித்துக்கொண்டிருப்பதாலும், ஸ்திரீகளின் கற்பு அடியோடு அழிந்துவிடுமென்பது சாஸ்திரங்களின் ஸித்தாந்தம். சரீரத்தாலும், வாக்காலும் நடத்தப்படும் புண்ணியபாபங்களைக்காட்டிலும் மனதால் செய்யப்படும் தர்மாதர்மங்கள் மிகப்பெரியதென்றும் தர்மதத்வக்ஞர்களின் அப்பிப்பிராயம். மனதால் ரஹஸ்யமாகப் பாபத்தைச் செய்துவிட்டு அதன் பலனையனுபவிக்காமலிருக்க ஸாத்தியமில்லை. மானஸிகமாக பாபாசரணம் ஏற்பட்டாலும் அதிக துக்கமென்னுமிவ் விஷயத்திற்கு அனேக ஆதாரமுண்டு. அன்றியும் ஸ்ரீவாராஹமிஹிராசாரியரும், "ஸ்திரீகள் தன் புருஷனோடு ஸம்போகத்தை அடையும்போது வேறு எவனையாவது தியானித்துக்கொண்டிருக்கும் பக்ஷத்தில் அக்காலத்தில் உண்டாகும் கர்ப்பமும் அந்த தியானிக்

கப்பட்ட புருஷனைப்போலவே அமைந்துவிடும்'' என்று சொல்லி இருக்கிறார். சரீரவர்க்ஸம்பந்தம் சிறிதும் பிறருடனில்லாதபோதே மானஸிகமாகத் தியானம்மட்டிலும் செய்துகொண்டிருப்பதற்கே தனக்கும், கர்ப்பத்துக்கும் தோஷமதிக மென்றால் சரீரஸம்பந்தத்திற்கும், வாக்ஸம்பந்தத்திற்கும் தோஷமெவ்வளவு இருக்குமென்பதை நிர்ணயித்துக்கொள்ளும் விஷயத்தில் தங்களுக்கே பொருப்பை அளித்துவிட்டேன். ஆகையால் ஸ்திரீகளுக்கு மானஸிகமாக ஏற்படும் வ்யபிசாரமும் மிகக்கொடியதேயாகும். இந்த தோஷத்தை விலக்குவதற்காகவே வேதத்தில் ஒரு மந்திரமும் ஏற்பட்டுள்ளது.

அந்த மந்திரத்தால் சிராத்தத்தில் ஹோமம் செய்துவருகின்றோம். அம்மந்திரத்துக்கு சிராத்தஹோமத்திலும் சாதுர்மாஸ்யத்திலும் விநியோகமென்பது அர்த்தவசமாக ஸித்திக்கின்றது என்று மீமாம்ஸகஸித்தாந்தம். இந்த மந்திரத்தில் புத்திரன் தன் தாயாரிடத்தில் வ்யபிசாரதோஷம் ஸம்பவித்திருக்குமோவென்று ஸம்சயத்துடன் கூறுகிறான். மனோவாக்காயகர்மங்களால் வ்யபிசாரம் ஸ்திரீகளுக்கு ஸம்பவிப்பது மிகச்சுலபம். இம்மந்திரத்தைக் கொண்டு ஹோமம்செய்வதால் காயிகவாசிகதோஷம் நிவர்த்திக்க மாட்டாது. प्रलुलुभे என்றிருப்பதால் மானஸவ்யபிசாரதோஷத்திற்குத்தான் இது பிராயச்சித்தமாகும். இந்த மந்திரம் மானஸ வ்யபிசாரதோஷ பரிஹாரத்துக்காகத்தான் மனு முதலியவர்களும் தீர்மானித்திருக்கின்றார்கள். ஆகையால் ஸந்ததிகளுக்குப் பிராயச்சித்தமாக இந்தஹோமஞ்செய்யவேண்டும் என்று ஏற்படுகின்றது.

இங்கு தர்க்கநிபுணர்களின் ஆக்ஷேபம் ஒன்றுண்டு:- "அந்த மந்திரத்தால் சிராத்தஹோமம் செய்வது மிகவும் அஸங்கதம். ஏனென்றால் புத்திரனுக்குத்தாயாரிடத்தில் வ்யபிசாரதோஷத்தை மானஸிகமாகவாவது கல்பிப்பதற்கு அதிகாரமில்லை. வேதங்களில் தாயாரைத் தெய்வமாக பாவனைசெய்து பூஜிக்கவேண்டுமென்று அனுசாஸனம் பண்ணப்பட்டிருக்கின்றதல்லவா? அப்படிப்பட்ட தாயாரிடத்தில் தோஷமிருப்பதாக ஸம்சயப்படுவதும் தவறன்றோ? ஸ்வயபுத்தியற்ற நமது முன்னோர்கள் பரமபூஜ்யர்களான் தாயாரிடத்திலும் ஸம்சயத்தையடைந்தும் வ்யபிசாரதோஷத்தை ஆரோபித்தும் அதன் ப்ரிஹாரத்துக்காக இந்த மந்திரத்தையும் இதற்கு

சிராத்தஹோமத்தில் விநியோகத்தையும் கல்பித்து ஆசாரணம் பண்ணிவைத்தார்கள். பின்பு யாவரும் இந்த துராசாரத்தையே பின்பற்றி அனுஷ்டிக்கத்தலைப்படவே நாடெங்கும் இத்துராசாரம் பரவலாயிற்று. ஆகவே விவேகிகளாகிய நாம் இந்த வழக்கத்தை அடியோடு நிறுத்திவிடவேண்டும். முன்னோர்களின் மூடப்பழக் கங்களையறிந்தும் அனுஷ்டிப்பது நகைப்புக்கிடமாகுமன்றோ? ஆசாரத்தைக்கொண்டு ஏற்பட்டுள்ள இந்த மந்திரத்தை ஸ்திரீ களுக்கு 'வ்யபிசாரதோஷம் உண்டென்பதற்குப் பிரமாணமாக எடுத்து எழுதுவதும் மூடத்தனம்' என்று.

இதற்கு உத்தரம் கூறுவாம்:—

ஸ்திரீகளிடத்தில் வ்யபிசாரதோஷத்தை முன்னோர்கள் கல் பித்துவிட்டதாகக் கூறும் மேதாவிகளை மூன்று கேள்வி கேட்க் வேண்டும். வ்யபிசாரத்தை ஆரோபிக்குமாசயதோஷம் நமது முன்னோர்களனைவருக்குமா? அல்லது மனுமுதலிய மஹரிஷிக ளுக்குமட்டிலுமா? இல்லாவிட்டால் நித்யஸித்தவேதத்திற்கா? முன்னோர்களனைவருக்குமாசயதோஷமுண்டென்பது நிஷ்ப்ரமா ணமும் அஸங்கதமுமாகும். முன்னோர்கள் யாவரும் துஷ்டர்க ளென்பதில் ஏதாவதொரு பிரமாணமிருக்குமேயானால் இந்த ஆசா ரத்தையும் அவர்கள் கல்பித்துவிட்டதாகவே தங்களைப்போல் நாங்களுமொப்புக்கொண்டு அடியோடு அழித்துவிடத் துணிந்து விடுகின்றோம். இவ்விஷயத்தில் உங்களபிப்பிராயத்துக்கு அனு குணமான பிரமாணம் உங்கள் வார்த்தையைத்தவிர வேறொன்று மில்லையே. ஆகவே முன்னோர்களனைவரும் துஷ்டர்களென்பது யுக்தியுக்தமாகுமா?

இனி மனு, யாக்ஞவல்க்யர் முதலிய மஹரிஷிகள் இவ்விதம் கல்பித்துவிட்டு ஸகலஜனங்களையும் அனுஷ்டித்துவரும்படிசெய்து விட்டார்கள் என்பதுதான் யுக்தமென்று சொல்லவேண்டும். ஏனெனில் மனுமுதலியவர்களால் எழுதப்பட்ட ஸ்மிருதிகிரந்தங் களில் தான் இம்மந்திரமும் அதன் விநியோகமும் ஸ்பஷ்டமாய்க் காணப்படுகின்றது. ஆகையால் மனு முதலிய மஹான்களே தோஷபுத்தியுள்ளவர்கள் என்றுதான் அங்கீகரிக்கவேண்டுமென்ற தர்க்க குசலனுடைய தர்க்கமும் குதர்க்கமேயாகும்.

பாமரர்களாலும் அனுஷ்டிக்காததும், மிக அயுக்தமாயுமுள்ள வ்யபிசார தோஷத்தைத் தாயாரிடத்தில் காருணிகர்களாகிய மஹரிஷிகள் எதற்காகக் கல்பனஞ் செய்யவேண்டும். தர்மரஹஸ்யங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உண்மையாக அறிந்திருக்கும் அம்மஹான்கள் லோகாநர்த்தகரமாகிய இந்த துராசாரத்தைக் கல்பனம் செய்துவிட்டதாகக்கூறும்உனக்கு கல்பனம் ஆதரிக்கத் தகுமா ? தீர்க்கதர்சிகளாயும், ஸர்வக்ஞர்களாயும், பரமஹிதர்களாயும், பக்ஷபாதமற்றவர்களாயுமுள்ள மனு, யாக்ஞவல்க்யர் முதலிய முன்னோர்களை அக்ஞர்களாகவும், வஞ்சகர்களாகவும், பக்ஷபாதிகளாகவும் தங்களைப்போல் நவீனமேதாவிகள் அபிப்பிராயப்படுவது அநுசிதம். ஆகவே மஹரிஷிகள் பக்ஷபாதமாகவோ, வஞ்சகத்தனமாகவோ தர்மங்களை அனுஷ்டிக்கும்படி உபதேசிக்கவே மாட்டார்கள். இக்காரணம்பற்றியே ஸ்திரீகளுக்கு ஸ்வபாவமாக ஏற்பட்டுள்ள குணதோஷங்களை நிரூபணம் செய்யுமிடத்தில் மனுமுதலிய மஹரிஷிகள் "ஸ்திரீகளிடம் த்வேஷபுத்தியால் தோஷங்களை கெட்ட எண்ணத்துடன் ஆரோபித்துவிட்டதாக" ஜனங்கள் தங்களை நினைத்துக்கொள்ளாமல் இருப்பதற்காகவே நிரூபிக்கப்படும் விஷயங்களுக்கு சுருதிவசனங்களை பிரமாணமாக எடுத்துக்காட்டுவது வழக்கம். அப்படியே மனுஸ்மிருதியில் ஒன்பதாவது அத்தியாயத்தில்ஸ்திரீகளுக்குபிரும்மஸிருஷ்டி முதல் ஏற்பட்டுள்ள தோஷங்கள் பலவுண்டென்று கூறி, அந்த தோஷங்களை அவர்களை நிந்திக்கவேண்டுமென்ற கெட்டஎண்ணத்தால் நானாகக் கூறவில்லை. அவர்களுக்கு அனேக தோஷமுண்டென்று சுருதிகளிலேயே விஸ்தாரமாய்க்கூறப்பட்டுள்ளதென்று நினைத்தே இத்தகைய தர்க்கபண்டிதர்கள் இனி அவதரிப்பார்கள் என்று மனு கூறியிருக்கின்றார். உதாஹரணமாகவும் ஒரு சுருதிவசனத்தை உதாஹரித்திருக்கின்றார். அது கீழ்க்கண்ட மந்திரமேயாகும். ஆகையால் பக்ஷபாதமின்றியும் தம்மிடத்தில் தோஷஸம்சயம் சிறிதும் ஏற்படாமலிருக்கும்படியும் நடுநிலையில் அமர்ந்துகொண்டு சுருதிமூலமாக தர்மவ்யவஸ்தைகளைச் செய்துவரும் மஹரிஷிகள் ஸ்திரீகளிடத்தில் தோஷத்தையும் அதற்காக ஒரு துராசாரத்தையும் தேசமெங்கும் பரவும்படி செய்துவிட்டதாகக் கூறுவது துர்புத்தியேயாகும்.

வக்ரஸமயத்தில் கேர்ட்களுக்கு முன் ராசியின் பலன் உரைத்தவாறு, நக்ஷத்திரங்களின் அர்த்தாதிகபோகம் அதாவது ஒன்றரைமடங்கு நாழிகை முதலியன பலனுக்காக உரைக்கப்பட்டன. (21)

तस्मादध्यर्धभोगादि सन्ध्यांशादि प्रकल्पनम् ।
कर्मणो ऽन्यत्रजानीयात् शुभकालविनिर्णयः ॥२२॥

ஆதலின் ஸந்தியாநாழிகைகள், அத்யர்த்தபோகங்கள் முதலியவற்றை ஏற்படுத்தியிருத்தல் சிராத்தாதிகன்மங்களுக்கல்ல; எஞ்சிய சுபகாலங்களை நிச்சயிப்பதற்கென்றறிக. (22)

रवीन्दुमन्दसंसिद्धात्तत्तत्तिथ्यादि भोगतः ।
स्यातां तत्कालबीजोत्थौ बाणवृद्धिरसक्षयौ ॥२३॥

மந்தபலம்மாத்திரம் ஸம்ஸ்கரிக்கப்பெற்று அமைகிற திதி முதலியவற்றின் பரமநாழிகைகளைக் காட்டிலும் அந்தந்தக் காலத்திற்குரிய சரபீஜஸம்ஸ்காரத்தால் அமைகிற திதி முதலியவற்றின் பரமநாழிகைகளின் அளவு ஐந்து நாழிகைகள் கூடினதாகவும், ஆறு நாழிகைகள் குறைந்ததாகவும் ஏற்படும். (23)

तत्कालबीजोपनयो भास्करेण विपश्चिता ।
बीजोपनयभाष्यादावन्यैरपि निवेदितः ॥२४॥
अतः पैतृककर्मादौ तत्कालचरबीजकैः ।
बाणवृद्धा रसक्षीणा ग्राह्या नान्या तिथिः क्वचित् ॥२५॥

ஆகையால் சிராத்தாதிகர்மங்களில் இக்காலத்திற்குரிய சரபீஜஸம்ஸ்காரத்தால் பரமநாழிகையில் ஐந்து ஏறியிருப்பதும், ஆறு குறைந்திருப்பதுமான திதியையே கைக்கொள்ளவேண்டுமேயன்றி மந்தபலஸம்ஸ்காரத்தால்மாத்திரம் அமைகிற திதியை ஒருக்காலும் எடுத்துக்கொள்ளக்கூடாது. (24, 25)

குறிப்பு:— ஐந்து நாழிகை ஏறியும், ஆறு நாழிகை குறைந்தும் திதி முதலியவை ஸ்ரீநிவாஸதீக்ஷிதரவர்களது காலத்தில் ஏற்பட்டிருந்தன. தற்போதிய கணிதத்தில் அமைகின்ற பூமத்யத்ருக்துல்யமான திதிமுதலியவைகளின் பரமநாழிகைகள் ஆறு நாழிகைகள் அதிகமும், பத்து நாழிகைகள் குறைந்தும் காண்கின்றனவென்பதற்கு கணிதத்திலும் வேறு ஆதாரம் வேண்டுவதில்லை. உதாரணமாக இந்த சுக்ல-ஜோத்திய கும்பகோண

மடத்துப் பஞ்சாங்கத்தில் வைகாசி-மீ 25உ அமாவாஸியையின் பரம நாழிகை 50-57, 26உ சுக்லப்ரதமையின் பரமநாழிகை 50-36, ஆனி-மீ 9உ பௌர்ணிமையின் பரமநாழிகை 66-8, மறுநாள் கிருஷ்ணப்ரதமையின் பரமநாழிகையும் அவ்வாறே. ஆராய்ந்துநோக்கின் நக்ஷத்திரமுதலியவியவற்றிற்கும் உதாரணங்கள் காண்பது எளிதென்றறிக.)

एवं सायनवर्षाणां मासानामपि निर्णयः ।
व्यतीपातानि सिद्ध्यर्थं प्रत्ययार्थमपीष्यते ॥२६॥

ஸாயனவர்ஷங்களையும் ஸாயனமாதங்களையும் நிர்ணயித்ததும் வியதிபாதாதிகணனத்திற்கும் ஸமாகமாதிகளைப் ப்ரத்யக்ஷமாக வேதம் செய்தறிந்து கணிதத்தில் நம்பிக்கை பிறப்பிப்பதற்குமே என்றறிக. (26)

मयाय सूर्यसिद्धान्ते भास्करांशः पुमानपि ।
दृक्कर्मायनमाक्षञ्च ग्रहणादेरदर्शयत् ॥२७॥

ரவியின் அம்சாவதார புருஷனும் ஸூர்யஸித்தாந்தத்தில் மயனுக்கு த்ருக்கர்ம, ஆயனகர்ம, ஆக்ஷகர்ம ஆகிய இவற்றை க்ரஹணமுதலியவற்றிற்காகவே விளக்கினார். (27)

नक्षत्रग्रहयोगेषु ग्रहास्तोदयसाधने ।
शृङ्गोन्नतौ तु चन्द्रस्य दृक्कर्मादाविदं स्मृतम् ॥२८॥

க்ரஹங்கள் நக்ஷத்திரங்களுடன் சேருதல், கோட்களின் உதயாஸ்தமனகணிதம், சந்திரசிருங்கோன்னதி முதலிய காக்ஷிகளை கணிக்கையில் இவற்றை உபயோகிக்கவேண்டும். (28)

इति हि प्राह भगवान् दृक्क्रिये ते व्यवस्थिते ।
तस्मात्सायनमासे तु तिथिश्राद्धं न चार्हति ॥

என்றல்லவோ அவர் உரைத்திருக்கிறார். ஆதலின் பூபிருஷ்டத்ருக்கிரியை பூமத்யத்ருக்கிரியை ஆகிய இவ்விருவகைகளும் எந்தெந்த ஸமயங்களில் உபயோகப்படுகின்றன என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஸாயனமாதத்தில் அமைகிற திதி சிராத்தத்திற்குரியதல்ல. (29)

छायार्कजनितो मासो दृक्सिद्धो नहि वास्तवः ।
तस्मान्निरयणे मासि तिथिर्ग्राह्या न चान्यथा ॥३०॥

சங்குச்சாயையினின்றும் அமைகிற ரவிஸ்புடத்தால் கணிக்கப்படுகிற மாதம்(பூபிருஷ்ட)த்ருக்ஸித்தமானதேயன்றி உண்மையானதல்ல. ஆகையால் நிரயனமாதத்தின் திதியை எடுத்துக் கொள்ளவேண்டுமேயன்றி வேறு திதியை உபயோகிக்கவொண்ணாது. (30)

पितृकार्यं तु सर्वेषामृद्धिभाजनमुत्तरे ।
द्विवसद्वितये प्राप्ते पूर्वत्र तु कुलक्षयः ॥३१॥

பித்ருகார்யங்கள் உத்தரதிதியிலேயே அனுஷ்டிக்கப்பட்டால் நன்மை பயக்குகின்றன. ஒரு திதி இரண்டு நாட்களிலும் இருந்தால் முதல்நாளில் (சிராத்தமனுஷ்டித்தால்) குலம் நசித்துப் போகும். (31)

मासे संवत्सरे चापि तिथिद्वैधं यदा भवेत् ।
तत्रोत्तरोत्तमा ज्ञेया पूर्वा स्यात्तु मलिम्लुचा ॥३२॥

(மாஸிகமாயினும் வார்ஷிகமாயினும்) ஒரு சிரார்த்த திதி 2-முறை ஒருமாஸத்தில் ஸம்பவிக்குமாயின், இரண்டாவதே உத்தமமானதென்றும் முந்தியது 'மலிம்முலுசம்' (அதிமாஸத்தியது, தோஷமுற்றது) என்றறிக. (32)

यद्युत्तरा च दुष्टा स्यात् संक्रान्तिग्रहणादिभिः ।
तदा पूर्वा तिथिर्ग्राह्या द्वयोर्दोषे परा मता ॥३३॥

இரண்டாவது திதியும் ஸங்கிராந்தி, க்ரஹணமுதலியவற்றால் தோஷமுறுமாயின் முந்திய திதியையே எடுத்துக்கொள்க; இரண்டும் தோஷமுறின் பிந்தியதையே கிரஹிக்கவேண்டும். (33)

अर्धरात्रादधस्ताच्चेत् संक्रान्तिर्ग्रहणं तदा ।
उपाकर्म न कुर्वीतत्येतन्नीत्या तयोरिह ॥३४॥
सद्भिर्दोषत्वमुन्नीतं शिष्टानिष्ठानुगामिभिः ।

அர்த்தராத்திரிக்கு முன்னும், ஸங்கவத்திற்குப் பிறகும் ஸங்கிரமணமேனும் கிரஹணமேனும் நேருமாயின் அன்று உபாகர்மம் செய்யக்கூடாது. இதே முறையையே அனுஸரித்து சிஷ்டர்கள் சிராத்த திதிக்கும் தோஷம் கற்பித்திருக்கிறார்கள். (34½)

यस्मिन्नहनि संक्रान्तेः परं मध्यन्दिनं भवेत् ॥३५॥
आब्दिकं तत्र कर्तव्यमन्यथा ग्राह्यमुत्तरम् ।

மத்யான்னத்திற்குமுன் ஸங்கிரமணம் நேரிடுகிற நாளில் ஆப்திகம் செய்யப்படவேண்டும். அன்றேல் பிந்திய திதியையே (பிறகு வருகிற திதியையே) எடுத்துக்கொள்ளவேண்டும். (35½)

उभयोः कर्मकालस्य दोषे तुल्ये मनीषिभिः ॥३६॥
माससंबन्धभूयस्त्वं यत्र सा गृह्यतां तिथिः ।
यदिस्यादुभयोस्तौल्यं माससंबन्धतोऽपि च ॥३७॥
तदापरैव संग्राह्या यथा पूर्वमितिस्थितिः ।

இரண்டு திதிகளும் ஸமமான தோஷமுறுமாயின், உரிய மாதத்துடன் அதிக ஸம்பந்தமுள்ள திதியை எடுத்துக்கொள்க.

இரண்டிற்கும் மாஸ ஸம்பந்தமும் ஒரே அளவுள்ளதாயிருப்பின், பொதுவிதிப்படி இரண்டாவது திதியையே எடுத்துக் கொள்க. (37½)

प्रागर्द्धरात्रात्परतस्सङ्गवाद्यदि संक्रमः ॥३८॥
सएव कर्मकालस्य दोष इत्यभिधीयते ।

நடுஇரவிற்கு முன்னும் ஸங்கவத்திற்குப் பிறகும் ஸங்கிரமம் நேருமாயின் அதுவே திதிக்குதோஷமென்று கூறப்படுகிறது. (38½)

भुक्तेर्निषिद्धतापि स्यात् कालदोषैस्सतां मते ॥३९॥
अन्नश्राद्धं न निष्पाद्यं यत्र भोजनमन्तरा ।

பெரியோர் போஜனத்தைத் தடுத்திருக்கிற வேளைகளில் அன்னசிராத்தம் செய்யக்கூடாது. (39½)

भुक्तेर्निषिद्धकालेतु श्राद्धालो यदा भवेत् ॥४०॥
हेमश्राद्धं तु कर्तव्य मामश्राद्धमथापि वा ।

அவ்விதமான காலங்களில் சிராத்தம் நேரிடுமாயின் ஹிரண்ய ரூபமாகவோ ஆமரூபமாகவோ செய்யப்படவேண்டும். (40½)

यद्वा परेद्युः कर्तव्यं दोषापाये क्षपासुवा ॥४१॥
रात्रावपि क्वचिच्छ्राद्धे गौकालस्य कीर्तनात् ।